**கவனிக்க.-** *2009.10.16 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1625 - 2009 ඔක්තෝබර් 23 වැනි සිකුරාදා - 2009.10.23**

*1625 ஆம் இலக்கம் – 2009 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 1458 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1461 |


**கவனிக்க.-** இவ்வர்த்தமானியின் பகுதி V இல் காலாண்டு பகுதிக்கான (ஒற்றோபர்-திசெம்பர்) புத்தகப் பட்டியலொன்று பிரசுரிக்கப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வராராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை – நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2009, ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2009, ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2009 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத்தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

*எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.*

(i) *முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;*

(ii) *ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;*

(iii) *ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;*

(iv) *சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;*

(v) *ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;*

(vi) *பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.*

*பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.*

*1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.*

*2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.*

*3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.*

*5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.*

*6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.*

*7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.*

*8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.*

*9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.*

*10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.*

*11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.*

*12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.*

*13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.*

*14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.*

*15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.*

*16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.*

*பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்*

(i) *ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.*

(ii) *ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.*

(iii) *நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.*

(iv) *சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.*

(v) *சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.*

(vi) *விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந்தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.*

(vii) *உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.*

(viii) *எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.*

(ix) *ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.*

(x) *வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.*

(xi) *உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.*

(xii) *மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.*

*பரீட்சை ஆணையாளர் நாயகம்.*

*இலங்கை பரீட்சைத் திணைக்களம்,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை.*

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு, இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி - மாத்தளை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாயும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2009, கார்த்திகை மாதம் 23 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2009, செத்தெம்பர் 17.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மாத்தளை | லக்கல பள்ளேகம | கஹல உடசிய பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் மாத்தளை கிழக்கு பிரிவின் விவாகப் (கண்டிய மற்றும் பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், மாத்தளை |
| மாத்தளை | அம்பன்கங்க கோரளை | அம்பன்கங்க தெற்கு பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் மாத்தளை கிழக்கு பிரிவின் விவாகப் (கண்டிய மற்றும் பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், மாத்தளை |

10-655

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாயும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2009, கார்த்திகை மாதம் 23 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2009, செத்தெம்பர் 16.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | யட்டிநுவர | வல்கம்யாய பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், கண்டி. |

10-656

## பதிவாளர் நாயகத் திணைக்களம்

விவாக, பிறப்பு, இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி - கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாயும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2009, கார்த்திகை மாதம் 23 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2009, செத்தெம்பர் 16.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | பாத்தஹேவாஹட்ட | கம்பஹய தெற்கு, இல. 02 பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் கம்பஹய தெற்கு பிரிவில் விவாகப் (கண்டிய மற்றும் பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், கண்டி |
| கண்டி | நாற்புற சூழலும் கங்கவட்ட கோரளையும் | நாற்புற சூழலும் கங்கவட்ட கோரளைப் பிரிவில் விவாகப் (கண்டிய மற்றும் பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், கண்டி |

10-657

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சு

*மாணவர் தாதியர் பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு - 2009*

சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் மாணவ தாதிமார் பயிற்சியின் பொருட்டு ஆட்சேர்த்துக்கொள்வதற்கு கீழே குறிப்பிடப்படும் தகைமைகளைக் கொண்டுள்ள விவாகமாகாத இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (இந்த அமைச்சின் கீழ் நிருவகிக்கப்படும் வைத்தியசாலைகளின் தேவை கருதி ஆண் விண்ணப்பதாரிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.)

1. **கல்வித் தகைமைகள்**.- (அ) 2008 ஆம் ஆண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சைக்கு தோற்றி ஒரே தரத்தில் குறைந்தபட்சம் மூன்று விஞ்ஞான பாடங்களில் தேர்ச்சியடைந்திருத்தல்.

(ஆ) க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் தாய்மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(இ) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கு மேற்குறிப்பிட்ட இரண்டு பரீட்சைகளினதும் சான்றிதழ்களின் நிழல் பிரதிகள் (போட்டோ கொப்பி) உறுதிப்படுத்தப்பட்டு விண்ணப்பங்களுடன் இணைத்தல் வேண்டும்.

2. **ஏனைய தகைமைகள்**.- (அ) இலங்கைப் பிரசையாக இருக்கவேண்டும்.

(ஆ) 2009.11.20 ஆந் திகதியில் 18 வயதிற்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

(இ) உயரம் : 4 அடி 10 அங்குலத்திற்குக் குறையாதிருத்தல்.

(ஈ) திருமணமாகாதவராக இருக்க வேண்டும்.

(உ) நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்ற விரும்புதலும், நல்ல சுகதேகியாகவும் இருத்தல் வேண்டும்.

(ஊ) மேற்படி தகைமைகளைப் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரர்கள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர் என்பதுடன் க. பொ. த. (உ/த.) பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின்படி அவ்வாண்டில் சமமாகும்வகையில் மாவட்ட அடிப்படையின் மீது தேவையான எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்படும்.

தான் விண்ணப்பிக்கும் மாவட்டத்தினுள் மூன்றாண்டுகள் குடியிருப்பை உறுதிப்படுத்துவதற்கு வாக்காளர் பட்டியலில் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பதாரியின் பெயர் வாக்காளர் பெயர்ப்பட்டியலில் குறிப்பிடப்பட்டு இல்லாவிடின் அவரது பெற்றோர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருக்க வேண்டும்.

அவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பின் அப்பெயர்கள் தனது பெற்றோர்களின் பெயர்கள் என்பதை உறுதிப்படுத்துவதன் பொருட்டு பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்றை நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பித்தல் வேண்டும்.

3. **விண்ணப்பிக்க வேண்டிய முறை**.- (அ) இவ்வறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் படி 8 1/2 × 13 1/2 அங்குல அளவுள்ள தாளில் இரு பக்கங்களையும் பயன்படுத்திக் கொண்டு விண்ணப்பங்களைத் தயாரித்துக் கொள்ள வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள இலக்கம் 01 முதல் இலக்கம் 09 வரை உள்ள பிரிவுகள் முதல் பக்கத்திலும் இலக்கம் 10 ஆம் பிரிவு இரண்டாம் பக்கத்திலும் இலக்கம் 11 முதல் 13 வரையிலான பிரிவுகள் 03 ஆம் பக்கத்திலும் இருக்கும் வகையில் விண்ணப்பங்களைத் தயாரித்துக் கொள்ள வேண்டும்.

(ஆ) விண்ணப்பத்தை உரிய முறையில் பூரணப்படுத்தி விண்ணப்பிக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மாணவ தாதிமார் பயிற்சியின் பொருட்டு ஆட்சேர்த்துக்கொள்ளுதல் - 2009" எனக் குறிப்பிட்டு 2009.11.20 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்பு, "பணிப்பாளர் (நிர்வாகம்) 01, சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சு, "சுவசிரிபாய", இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு 10" என்னும் முகவரிக்கு பதிவுத்தபால்மூலம் அனுப்ப வேண்டும். தாமதமாகி பெறப்படும் விண்ணப்பங்கள் இரத்துச் செய்யப்படுவதுடன் தபாலில் காணாதுபோதல், தாமதித்தல் என்பன ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

இலங்கை நிர்வாக சேவையில்/கல்வி சேவையில்/அரசாங்கத்தின் கணக்காளர் சேவையில்/அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஒருவர்/சமாதான நீதவான்/சட்டத்தரணி ஒருவர் அல்லது வருடாந்த சம்பளம் 2,40,360 இற்குக் குறையாத சம்பளம் பெற்றுக்கொள்ளும் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரினால் விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்பத்திரத்தில் உள்ள முத்திரைக் கூட்டில் ரூபா 500 இற்கான முத்திரை ஒட்டி கையொப்பம் இட்டு பெறுமதிநீக்கம் செய்தல் வேண்டும்.

4. **பயிற்சித் திட்டம்**.- (அ) தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் மாணவ ஆண்/பெண் தாதிமார்களாக தாதிமார் பயிற்சிப் பாடசாலைக்கு உட்படுத்தப்படுவதுடன், அவர்கள் சிங்கள/தமிழ் மொழிமூலம் 03 ஆண்டுகள் பயிற்சிப் பாடத்திட்டம் ஒன்றைப் பயிலுதல் வேண்டும்.

(ஆ) பயிற்சியின் பொருட்டு உட்படுத்திக்கொள்ளும் சந்தர்ப்பத்தில் தாதிமார் பயிற்சிப் பாடசாலைகளில் வலுவிலுள்ள சட்டதிட்ட கோவையொன்று பயிலுனர்களுக்கு வழங்கப்படும். இச்சட்டதிட்டங்களுக்கும் காலத்திற்குக்காலம் விதிக்கப்படும் ஏனைய சட்ட திட்டங்களுக்கும் அவர்கள் அமைதல் வேண்டும்.

(இ) பயிற்சி பெறும் கால எல்லையினுள் குறிப்பிட்ட பரீட்சைகளில் தேர்ச்சியடையாத அல்லது வேலையும் நடத்தையும் திருப்தியற்ற அல்லது தான் உட்படுத்தப்பட்ட பாடசாலையின் பரீட்சைகளையும் விடுமுறை நிபந்தனைகள் ஆகியவற்றை கடைப்பிடிக்கத்தவறும் பயிலுநர்களின் பயிற்சி எச்சந்தர்ப்பத்திலேனும் நட்டஈடு எதுவுமின்றி நிறுத்தப்படலாம். பயிற்சிக்காலத்தில் எந்தவிதமான விடுதலைகளுக்கும் உரித்தில்லாத தோடு இக்காலத்தில் வரவின்மைக்காக விசேட கொடுப்பனவிலிருந்து ஒரு தொகை கழிக்கப்படும். அத்தோடு பரீட்சை எழுதுவதற்கு 80% க்கு குறையாத வரவு இருத்தல் வேண்டும்.

(ஈ) தாதிமார் பாடசாலையொன்றில் பயிற்சி பெறும் காலத்தில் பயிலுனர்களுக்குக் கீழே குறிப்பிடப்படும் வகையில் கொடுப்பனவு வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| (1) முதலாம் வருடம் | - | மாதத்திற்கு ரூபா 12,920 |
| (2) இரண்டாம் வருடம் | - | மாதத்திற்கு ரூபா 13,040 |
| (3) மூன்றாம் வருடம் | - | மாதத்திற்கு ரூபா 13,160 |

பயிற்சியைத் திருப்திகரமாக பூரணப்படுத்திய பின்பு இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்த பயிலுநர்களுக்கு II ஆம் தரத்தின் "ஆ" பிரிவின் பதவி வெற்றிடங்கள் ஏற்படும் வகையில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் நியமனங்கள் வழங்கப்படும்.

(உ) பயிற்சி பெறும் காலத்தில் பயிற்சிகளினின்றும் விலகிக் கொண்டால் அல்லது பயிற்சியை விட்டுச் சென்றால் பயிற்சிக் காலத்தில் அவருக்கு/ அவளுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்பட்ட செலவினத்தின் பொருட்டு செலவிடப்பட்ட பணமும் அவர்/அவள் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தாவிடின் அப்பணத்தை அறவிட்டுக் கொள்வதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

5. **விவாகமாகாத நிபந்தனைகளும் உடன்படிக்கையும்.**- (அ) சகல விண்ணப்பதாரிகளும் விண்ணப்பங்களை அனுப்பும் திகதியில் விவாகமாகாதவர்களாக இருக்க வேண்டும் என்பதுடன பயிற்சி பெற்றுக் கொள்ளும் மூன்றாண்டு காலத்தினுள்ளும் விவாகமாகாதிருத்தல் கட்டாயமாகும். விவாகம் ஆகாதவர் என்பதை உறுதிப்படுத்துவதன் பொருட்டு கிராம உத்தியோகத்தரின் சான்றிதழ் ஒன்றை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இது பிரதேச சபை செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) ஆண்/பெண் தாதிமார், தாதிமார் பயிற்சிப் பாடசாலைக்கு உட்படும் பொழுது திருப்திகரமாகப் பயிற்சியை முடிப்பதென்றும் பயிற்சியைப் பூரணப்படுத்திய பின்பு குறைந்த பட்சம் 10 ஆண்டு காலம் சுகாதார சேவைகள் திணைக்களத்தில் சேவையாற்றுவதென்றும் சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்துடன் உடன்படிக்கையொன்றிற்கு உட்படுதல் வேண்டும். சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் இக்கால எல்லை காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும்.

6. **சேவையில் ஈடுபடுத்தும் நியதிகள்.**- (அ) மேற்படி பயிற்சியின் பின்பு நடாத்தப்படும் இறுதிப் பரீட்சையின் பெறுபேறுகளின் மீது நியமிக்கப்படும் பதவிநிலைத் தாதிமார் பதவிகள் உதவுத்தொகை ஓய்வூதியத்துடன் கூடியது. இதன்படி அவர்களின் விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய உதவுத்தொகை செலுத்த வேண்டும்.

(ஆ) II ஆம் தரத்தின் "ஆ" பிரிவின் பதவிநிலை தாதிமார் பதவிகளுக்கு மூன்று ஆண்டுகள் தகுதிகூர் நிலைக்காலத்திற்கு அமைவாக நியமிக்கப்படும்.

7. **சேவை நிபந்தனைகள்.**- (அ) சகல பயிலுனர்களும் பயிற்சி ஆரம்பிக்க முன்பு மருத்துவ சோதனை செய்வித்துக்கொள்ளல் வேண்டும்.

(ஆ) பொது நிர்வாக சுற்றறிக்கை 6/2006 (iv) இன்படி ரூபா 15,620- 4 ×180 - 6 × 240 - 11 × 320 - 20 × 360 - ரூபா 28,500 சம்பள அளவுத்திட்டத்தின்படி தாதி உத்தியோகத்தர்கள் II ஆம் தரத்தின் "ஆ" பிரிவின் பதவிகளுக்கு நிலவும் வெற்றிடங்களின்படி நியமிக்கப்படுவர்.

(இ) தாதிமார் சேவையின் சகல உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும், சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் நியமிக்கப்படும் கோட்பாடுகளின்படி புரியப்படும் இடமாற்றங்கள், நிதி உட்பட ஏனைய ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தினால் அடிக்கடி விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கும் கட்டளைகளுக்கும் அமைதல் வேண்டும்.

(ஈ) பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு விடயமாக இச்சுற்று நிரூபத்தில் அடங்காத விடயங்கள் சார்பாக எழக்கூடிய பிரச்சினைகளுக்கும், ஏனைய பிரச்சினைகளுக்கும் சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சின் செயலாளர் அவர்களின் தீர்மானம் இறுதியானதாகும்.

(வைத்திய கலாநிதி) எச். ஏ. பீ. கஹந்தலியனகே,
செயலாளர்,
சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சு**

*மாணவ தாதிமார் பயிற்சியின் பொருட்டு ஆட்சேர்த்துக்கொள்ளல் - 2009*

1. (அ) முதலெழுத்துக்களுடன் இறுதிப்பெயர் (ஆங்கில கெபிடல் எழுத்தில்) :----.

   (ஆ) முழுப்பெயர் (ஆங்கில கெபிடல் எழுத்தில் எழுத வேண்டும்) :----.

2. தபால் முகவரி :----.

3. (அ) நிரந்தர முகவரி :----.

   (ஆ) மாவட்டம் :----.

4. பிறந்த திகதி :-

   வருடம் :----, மாதம் :----, திகதி :----.

5. 2009.11.20 ஆந் திகதியில் வயது :-

   வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

6. பால் :

| | |
|---|---|
| ஆண் | |
| பெண் | |

(ஏற்புடைய கூட்டில் "✓" அடையாளம் இடுக.)

7. நீங்கள் இலங்கைப் பிரசையா?

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

(ஏற்புடைய கூட்டில் "✓" அடையாளம் இடுக.)

8. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.

9. உயரம் :- அடி :-----, அங்குலம் :-----.

10. கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உ.த.) பரீட்சையில் (விஞ்ஞான பாடம்) (புள்ளிகள் குறிப்பிட்ட பிரதியை இணைக்கவும்.)

ஆண்டு : ............................ சுட்டெண் : ..........................

| பாடங்கள் | தரம் | அலுவலக உபயோகத்திற்கு |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

(ஆ) க. பொ. த. (சாதாரண தர) பரீட்சை :

முதலமர்வு :

(1) பரீட்சை வருடமும் மாதமும் :----.

(2) சுட்டிலக்கம் :----.

| | பாடங்கள் | தரம் | அலுவலக உபயோகத்திற்கு |
|---|---|---|---|
| 1. | கணிதம் | | |
| 2. | தாய்மொழி | | |
| 3. | விஞ்ஞானம் | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |
| 7. | | | |
| 8. | | | |
| 9. | | | |
| 10. | | | |
| 11. | | | |
| 12. | | | |

இரண்டாம் அமர்வு :

(1) பரீட்சை வருடமும் மாதமும் :----.

(2) சுட்டிலக்கம் :----.

| | பாடங்கள் | தரம் | அலுவலக உபயோகத்திற்கு |
|---|---|---|---|
| 1. | கணிதம் | | |
| 2. | தாய்மொழி | | |
| 3. | விஞ்ஞானம் | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |
| 7. | | | |
| 8. | | | |
| 9. | | | |
| 10. | | | |
| 11. | | | |
| 12. | | | |

11. நீதிமன்றமொன்றில் எப்போதாவது குற்றம் தொடர்பில் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீரா? :-

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

(பொருத்தமான கூட்டில் '✓' அடையாளம் இடுக.)

ஆம் எனின், விபரம் தருக .....................................

12. (அ) இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் எனது அறிவிற்கு எட்டியவகையில் உண்மையானவை எனவும், சரியானவையெனவும் வெளிப்படுத்துகிறேன்.

(ஆ) என்னால் தரப்பட்டுள்ள இத்தகவல்கள் பொய்யானவை எனக் கண்டுபிடிக்கப்படின் சேவைக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கு முன்பு தகுதியற்றவன் எனவும் நியமனத்தின் பின்பு அவ்வாறு கண்டுபிடிக்கப்படின் சேவையினின்றும் விலக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

இங்கு ரூபா 500 க்கான முத்திரை ஒட்டி அதன்மேல் கையொப்பம் இட்டு செல்லுபடி அற்றதாக்குக.

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

13. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் ................................ என்பவரை நான் நன்றாக அறிவேன் என்றும் அவர் 2009 ....................... ஆந் திகதி என் முன்னிலையில் அவருடைய கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி :-----.

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின்
முழுப் பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.

10-690

---

**சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சு**

துணை மருத்துவ சேவையினுள் "இதயத்துடிப்பு மின் வரைபு பதிவாளர்" பயிற்சிக்கான பயிலுனர்களை ஆட்சேர்த்தல்- 2009

சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சில் இதயத்துடிப்பு மின் வரைபு பதிவாளர் பயிற்சி நெறிக்கு பயிலுனர்களை இணைத்துக் கொள்வதற்காக தகைமையுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. தகைமையுடைய மாணவர்கள் 2003-2007 க. பொ. த. (உ.த.) பரீட்சையின் Z - புள்ளிகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட முதன்மை அட்டவணையிலிருந்து தெரிவுசெய்யப்படுவர்.

2. தெரிவானது மாவட்ட ரீதியில் உள்ள சனத்தொகைக்கு அமைய தேவையான மாணவர்கள் பயிற்சிக்காக சேர்த்துக்கொள்ளப்படுவர்.

3. இது ஒரு முழுநேர பயிற்சிநெறியாகும். எனவே வேறு பயிற்சி நெறிகளுக்கு 05 வேலைநாட்களிலும் சனிக்கிழமை முற்பகலிலும் செல்லும் மாணவர்கள் இதில் இணைந்துகொள்ள முடியாது.

4. பயிற்சிக்குரிய காலம் ஒரு வருடமாகும்.

5. **கல்வித் தகைமைகள்**:-

5.1 க.பொ.த.(சா.த.) பரீட்சையில் சிங்களம்/தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம் உட்பட மேலும் ஒரு பாடத்தில் திறமைச்சித்தியுடன் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு ஆங்கிலம் உட்பட ஆறுபாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

5.2 2003-2007 க. பொ. த. (உ.த.) பரீட்சையில் தோற்றி பௌதிகவியலில் சாதாரண சித்தியுடன், விலங்கியல்/உயிரியல் திறமைச்சித்தியும் உட்பட தாவரவியல், இரசாயனவியல் மற்றும் விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் ஒன்றிலுமாக மொத்தம் மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் விஞ்ஞானப் பிரிவில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். க. பொ. த. (உ.த.) Z புள்ளி மதிப்பீடு விண்ணப்பப் பத்திரத்தில் சேர்க்கப்பட்டிருத்தல் கட்டாயமாகும்.

6. **ஏனைய தகைமைகள்**.- (அ) 30.11.2009 ஆந் திகதியில் 18 வயதிற்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

(ஆ) நாட்டின் எப்பகுதியிலும் சேவைபுரிய சம்மதிக்க வேண்டும்.

(இ) உடற் தகுதியுடன் சுகதேகியாகவும் இருக்கவேண்டும்.

(ஈ) விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் 3 வருடங் களாவது வசித்துவருபவராக இருக்க வேண்டும்.

7. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்துக்கமைய விண்ணப்பத்தை பூர்த்திசெய்து அதில் உள்ள முத்திரைக்குரிய கூட்டில் 500 ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டி அதன்மேல் தனது கையொப்பமிடுவதன் மூலம் முத்திரையை இரத்துச் செய்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரியின் கையொப்பம் இலங்கை நிர்வாக சேவை/ கல்விச்சேவை/அரச கணக்காளர்சேவை/அரச பாடசாலை அதிபர்/ சமாதான நீதவான்/சட்டத்தரணி அல்லது வருடாந்த சம்பளம் 240,360 க்குக் குறையாத அரசாங்க உத்தியோகத்தர் ஆகியவர்களில் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

(இ) முழுமையாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இதயத்துடிப்பு மின் வரைபுப் பதிவாளர் பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு - 2009" என எழுதப்பட்டு பதிவுத்தபாலில் "பணிப்பாளர் (நிர்வாகம்) 02, சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சு, "சுவசிரிபாய", இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு 10" என்ற முகவரிக்கு 30.11.2009 இற்கு முன்னர் கிடைக்கும்படி அனுப்பவேண்டும்.

8. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறியத்தரப்படமாட்டாது.

9. முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

10. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

11. மேற்குறிப்பிட்ட கல்வித்தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகளுடன் விண்ணப்பித்தவர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். அவர்கள் பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகளை (மேலதிகப் பிரதிகளுடன்) நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும். சமர்ப்பிக்க முடியாத பட்சத்தில் அவருக்கான நேர்முகப் பரீட்சை இரத்துச் செய்யப்படும் :

(i) பிறப்புச் சான்றிதழ் ;

(ii) கல்விச்சான்றிதழ் மூலப்பிரதிகள், மூலப்பிரதிகள் இல்லாதவிடத்து வெளிவாரி பரீட்சார்த்தி என்றால் பரீட்சார்த்திகளுக்குக் கொடுக்கப்பட்ட பெறுபேறு படிவங்கள் அல்லது பாடசாலை பரீட்சை அமர்வு என்றால் குறித்த பாடசாலை அதிபர்களினால் கொடுக்கப்பட்ட கடிதத்தின் மூலப்பிரதி ;

(iii) பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சை Z - புள்ளிகள் அளவு குறிப்பிடப்பட்டிருக்கும் சான்றிதழ் ;

(iv) தேசிய அடையாள அட்டை/கடவுச்சீட்டு/சாரதி அனுமதிப் பத்திரம் ;

(v) விவாகம் செய்யாததை உறுதிப்படுத்தி கிராமசேவை யாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழ் பிரதேச செயலாளரி னால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

12. **பயிற்சித் திட்டம்**.- (i) தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் பயிற்சி நெறிக்காக .............. பாடசாலைக்கு அனுமதிக்கப்படுவர். பயிற்சியாளர்களுக்கு ஆங்கில மொழிமூலம் பயிற்சிகள் வழங்கப்படும்.

(ii) பயிலுநர்கள் பயிற்சிப் பாடசாலையின் நடைமுறையிலிருக்கும் சட்டவிதிகளுக்கும் மற்றும் திணைக்களத்தினால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் கட்டளைக்கும் கட்டுப்படல் வேண்டும்.

(iii) பயிற்சிக்காலத்தினுள் நடத்தப்படும் பரீட்சைகளில் சித்தியடையத் தவறும் அல்லது செயற்பாடுகள், நடத்தைகளில் அதிருப்தி கண்டறியப்படும் அல்லது பயிற்சிப்பாடசாலை விதிமுறைகளைப் பின்பற்றத்தவறும் பயிற்சியாளர்கள் இப்பயிற்சிக்காலத்தின் எச்சந்தர்ப்பத்திலும் எதுவித நஷ்டஈடுகளும் வழங்கப்படாமல் விலக்கப்படுவர்.

(iv) இப்பயிற்சிக் காலத்தில் கொடுப்பனவாக மாதாந்தம் ரூபா 6000 வழங்கப்படும்.

(v) பயிலுநர்கள் பயிற்சி பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்படும் போது பயிலுனரானவர், பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்வதாகவும் பயிற்சியின் போது அதனைவிட்டு விலகமாட்டேன் எனவும், பயிற்சியின் பின் சுகாதார திணைக்கள சேவையில் நியமனம் வழங்கப்படின் ஆகக் குறைந்தது 10 வருடங்கள் சேவையாற்றுவேன் எனவும் சுகாதார சேவை பணிப்பாளர் நாயகத்துடனான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும். பயிற்சி நெறியிலிருந்து விலகுவதாயின் அல்லது பயிற்சியில் தொடர முடியாவிடின் அல்லது மேற்குறிப்பிட்ட 12 : (iii) இன் பிரகாரம் பயிற்சியிலிருந்து நீக்கப்பட்டால் திணைக்களத்தினூடாக அரசாங்கம் அவருக்காக வழங்கிய கொடுப்பனவுகளையும் மேற்கொண்ட செலவுகளையும் பயிலுனர் மீள்செலுத்தவேண்டும். இல்லாவிடின், அவற்றை மீளப் பெறுவதற்கான உரிய நடவடிக்கைகளை திணைக்களம் மேற்கொள்ளும்.

13. **சேவைக்கு நியமிக்கும் விதிகள்**.- பயிற்சி நெறி முடிவில் நிரந்தர நியமனங்கள் வழங்குவதற்கு திணைக்களம் கட்டுப்படவில்லை. எவ்வாறாயினும் இறுதிப் பரீட்சையில் சித்திபெறும் பயிலுநர்களுக்கு விண்ணப்பிக்கும் மாகாண வெற்றிடங்களுக்கேற்ப குறிப்பிட்ட சேவையின் தரம் III க்கான நியமனங்கள் அவர்களின் பெறுபேறுகளின் முதன்மை அடிப்படையில் வழங்கப்படும். முதல் நியமனத் திகதியிலிருந்து குறைந்தது இரண்டு ஆண்டுகள் கொடுக்கப்பட்ட நிலையத்தில் சேவையாற்ற வேண்டும் என்பது கட்டாயமாகும்.

14. விண்ணப்பங்களை நிரப்பும் போது கல்வி மற்றும் ஏனைய தகைமைகளை மிகவும் கவனமாகவும் சரியாகவும் நிரப்பவும். பயிற்சிகளின் போது அல்லது நியமனங்கள் வழங்கப்பட்ட பின்னரோ சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் போலியானவை எனக் கண்டு பிடிக்கப்படின், பயிற்சியிலிருந்து, சேவையிலிருந்து இடைநிறுத்தப்

படவோ அல்லது விலக்குவதற்கும் மற்றும் அரச சேவையில் மீள அனுமதிக்கப்படவோ முடியாதவாறு கறுப்புப் பட்டியலில் பெயரை சேர்க்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

15. தேர்ந்தெடுக்கப்பட்ட பயிலுநர்கள் இலங்கையின் எப்பகுதியிலும் சேவையினை மேற்கொள்ள தமது உடல் மற்றும் உளத் தகுதியினை நிரூபிப்பதற்கான மருத்துவப் பரிசோதனைக்குட்படுத்தப்படுவர். இப்பரிசோதனையில் தகுதியற்றவர்கள் பயிற்சியைத் தொடர்தல் நிராகரிக்கப்படும்.

16. மேற்கூறப்பட்டபடி சேர்த்துக்கொள்ளப்பட்ட அனைத்து உத்தியோகத்தர்களும் அரச சேவைக்கான அனைத்து சட்டங்களிற்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் விதிகள் மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் கொள்கை அமுலாக்கலுக்கு ஏற்பவும் நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் காலத்துக்குக் காலம் ஏற்படுத்தும் ஏனைய அரச சட்ட ஒழுங்கு மாற்றங்களுக்குக் கட்டுப்பட்டு செயற்பட வேண்டும்.

17. இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படாத பயிற்சி நெறிக்காக சேர்த்துக்கொள்வது தொடர்பாக எழும் எந்தவொரு விடயத்திற்கும் சுகாதார பராமரிப்பு மற்றும் போஷணை அமைச்சின் செயலாளரின் முடிவே இறுதியானதாகும்.

வைத்திய கலாநிதி எச். ஏ. பீ. கஹந்தலியனகே,
செயலாளர்,
சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சு.

சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சு,
இல. 385, வண. பத்தேகம விமலவன்ச தேரோ மாவத்தை,
கொழும்பு 10,
2009.09.23.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதார பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சு**

துணை மருத்துவ சேவையினுள் "இதயத்துடிப்பு மின் வரைபு பதிவாளர்" பயிற்சியின் பொருட்டு மாணவர்கள் ஆட்சேர்ப்பு - 2009

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.

(ஆ) முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

2. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3. தபால் முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

4. (i) நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(ii) மாவட்டம் :-----.

(iii) மாவட்டத்தில் நிரந்தர வதிவுடையவரா?, (ஆம் / இல்லை) :----.

(iv) ஆம் எனில் எவ்வளவு காலம் :----.

5. பிறந்த திகதி :-

ஆண்டு :-----, மாதம் :-----, திகதி :-----.

30.11.2009 ஆந் திகதியன்று வயது :-

வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

6. ஆண்/பெண் (உரிய கூட்டில் "✓" குறியிடுக)

| | |
|---|---|
| ஆண் | |
| பெண் | |

7. உயரம் : அடி .......... அங்குலம் ...........

8. நீங்கள் இலங்கைப் பிரசையா?

(பொருத்தமான கூட்டில் "✓" குறிப்பிடவும்)

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

9. விவாகமானவரா/விவாகமாகாதவரா? .................................

10. கல்வித் தகைமை :

(அ) க. பொ. த. (உ./த.) பரீட்சை (விஞ்ஞான பிரிவு மட்டும்)

(தயவு செய்து பெறுபேற்றுப் பத்திரத்தை இணைக்கவும்)

பரீட்சையின் திகதி :-----.

ஆண்டு :-----. சுட்டெண் :-----.
Z புள்ளி :-----.

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

(ஆ) க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சை - முதலாம் அமர்வு :
வருடம் :-----. சுட்டெண் :-----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

மேலும் அமர்வு :

(இ) க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சை :

வருடம் :----. சுட்டெண் :----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

11. ஏதாவது குற்றச் செயலுக்காக நீதிமன்ற தண்டனை அனுபவித் துள்ளீரா? :-
(பொருத்தமான கூட்டில் "✓" குறியிடுக)

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

ஆம் எனில் தயவு செய்து காரணத்தை குறிப்பிடுக :-
..........................................................................................
..........................................................................................

12. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**
(அ) எனது அறிவிற்கு அமைய என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானதும் சரியானதும் என உறுதிமொழிவதுடன் தற்போது முழுநேரப் பாடநெறிகள் எதிலும் ஈடுபடவில்லை எனவும் இத்தால் உறுதிமொழி கின்றேன்.
(ஆ) என்னால் இத்துடன் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் ஏதேனும் பிழையானவை அல்லது போலியானவை எனக் கணப் பட்டால் நான் தெரிவுக்கு முன்னராயின் தகுதியற்றவ ரென்றும் நியமனம் பெற்ற பின்னராயின் நட்டஈடு எதுவு மின்றி விலக்கப்படுவேன் என்பதையும் நான் நன்கறிவேன்.

முத்திரை

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

6. **உறுதிப்படுத்தல் :**

விண்ணப்பதாரர் திரு. ................................. எனக்கு தனிப்பட்ட முறையில் பரீட்சயமானவர் என்றும் அவரது கையொப்பம் எனது முன்னிலையில் 2009 ........................ ஆந் திகதி இடப்பட்டது என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.
(அலுவலக முத்திரையுடன்)

உறுதிப்படுத்துபவரின் விபரம் :-
முழுப் பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.

10-790

**அரச முகாமை உதவியாளர்கள் சேவையில் வகுப்பு III ஐச் சேர்ந்த அலுவலர்களை II இற்கு தரமுயர்த்தும் பரீட்சை – 2009**

1.0 அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III ஐச் சேர்ந்த அலுவலர்களை அச்சேவையில் வகுப்பு II இற்கு தரமுயர்த்தும் தகவுத்திறன் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2010, பெப்புருவரி மாதம் நடாத்தப்படும் என்பதை இத்தால் அறிவிக்கப் படுகிறது.

2. அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III ஐச் சேர்ந்த அலுவலர்களை அச்சேவையில் வகுப்பு II இற்கு தரமுயர்த்துவதற்கான இப்பரீட்சை கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, குருணாகல், அனுராதபுரம், பதுளை, இரத்தினபுரி மற்றும் கிளிநொச்சி ஆகிய நகரங்களில் நடாத்தப்படும். உரிய நகரங்களுக்கு நகர இலக்கங்களும் கீழே காட்டப்பட்டுள்ளன.

| நகரம் | | நகர இலக்கம் |
|---|---|---|
| கொழும்பு | - | 01 |
| கண்டி | - | 02 |
| காலி | - | 03 |
| மாத்தறை | - | 04 |
| யாழ்ப்பாணம் | - | 05 |
| மன்னார் | - | 06 |
| முல்லைத்தீவு | - | 07 |
| திருகோணமலை | - | 08 |
| மட்டக்களப்பு | - | 09 |
| குருணாகல் | - | 10 |
| அனுராதபுரம் | - | 11 |
| பதுளை | - | 12 |
| இரத்தினபுரி | - | 13 |
| கிளிநொச்சி | - | 14 |

மேற்படி ஏதேனுமொரு நிலையத்திற்காக போதியளவு பரீட்சார்த்திகள் இல்லாதவிடத்து அந்நிலையம் இரத்துச் செய்யப்படுவதுடன் அப் பரீட்சார்த்திகள் அடுத்துள்ள நிலையத்தக்கு மாற்றப்படுவர். விண்ணப்பிக்கும் நகரத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

3. (i) இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப் படுவதுடன் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக அவரால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுக வேண்டும். பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்குதல் அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமைகளை பூர்த்தி செய்துள்ளார் என்பதை ஏற்றுக்கொள்வதாக கருத்தில் கொள்ளுதல் ஆகாது.

(ii) பரீட்சார்த்திகளுக்கு விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள்

வர்த்தமானி பத்திரிகையில் புறம்பாக அச்சிடப்பட்டுள்ளன. இவ் ஒழுங்கு விதிகளை மீறினால் அவர்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாவர்.

4. **தகைமைகள்**.- சேவையில் வகுப்பு III ஐச் சேர்ந்தவர்களும் 2009, நவெம்பர் மாதம் 23 ஆந் திகதிக்கு முன்னர் நியமனங்களில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளவர்களும் 04 வருட முனைப்பான அத்துடன் திரப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்திசெய்துள்ளவர்களுமான அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றலாம்.

**குறிப்பு**.- தரமுயர்வுப் பரீட்சையில் சித்தியடைந்த திகதி மற்றும் 05 வருட முனைப்பான அத்துடன் திருப்திகரமான சேவைக்காலத்தை பூர்த்தி செய்த திகதி ஆகிய இரு திகதிகளில் பின்னராக அமையும் திகதி, பரீட்சையில் சித்தியடைகின்ற பரீட்சார்த்தியொருவர் சேவையில் வகுப்பு II இற்கு தரமுயர்த்துவதற்கு தகைமையடைந்த திகதியாக கருதப்படும்.

5. **பரீட்சைத் திட்டம்**.- பரீட்சைக்காக உள்ள பாடமும் அந்தந்த பாடங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளும் கீழே தரப்பட்டுள்ளன. சகல விடைத்தாள்களிலும் தெளிவற்ற கையெழுத்துக்களுக்கும் எழுத்துப்பிழைகளுக்கும் புள்ளிகள் கழிக்கப்படும். வாசிக்க முடியாதவாறு எழுத்துக்களை எழுதியிருக்கும் பரீட்சார்த்திகள் தகைமையற்றவர்களாக்கப்படுவர்.

| பாடம் | புள்ளிகள் | நேரம் |
|---|---|---|
| தாபன நடைமுறை | 100 | 2 மணித்தியாலங்கள் |
| நிதி முறைகள் | 100 | 2 மணித்தியாலங்கள் |
| பொது வினாத்தாள் | 100 | 1 மணித்தியாலம் |

**தாபன நடைமுறை**.- அலுவலக முறைகள் தொடர்பான கோட்பாடுகள், அவற்றின் முக்கியத்துவம், எழுத்துத் தொடர்புகள். கோப்பிடும் முறை மற்றும் படிவங்களைத் தயாரித்தல் போன்ற விடயங்கள் உள்ளடங்கும் வண்ணம் அரச அலுவலகங்களில் நடைமுறைப்படும் அலுவலக முறைமைகள் தொடர்பான அறிவு மற்றும் அலுவலக நடவடிக்கைகளின் போது பெற்றுள்ள அனுபவங்களின் தேர்ச்சி என்பவற்றை பரீட்சித்தல் இவ்வினாத்தாளின் நோக்கமாகும். தாபன விதிக் கோவையின் I ஆம் தொகுதியில் உள்ளடக்கப்படும் விடயங்கள் தொடர்பான அறிவை பரிசோதிக்கும் ஒரு பகுதியும் இவ் வினாத்தாள் கொண்டிருக்கும். இவ் வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும்.

பகுதி I - பல்விருப்பு வினா 25 - 30 நிமிடங்கள் - (25 புள்ளிகள்)

பகுதி II - பகுதிக்கட்டமைப்பு முறையிலான 04 வினாக்களில் 03 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும் - 1 1/2 மணித்தியாலங்கள் - (75 புள்ளிகள்)

**நிதி முறைகள்**.- இவ்வினாத்தாள் பின்வருமாறு அமைந்திருக்கும்:-

(அ) பகுதி I - கூட்டல் மற்றும் கழித்தல் பயிற்சிகள் - 15 நிமிடங்கள் (25 புள்ளிகள்)

(ஆ) பகுதி II - அரசாங்க திணைக்களங்கள், அமைச்சு அலுவலகங்கள் என்பவற்றில் பிரயோகிக்கப்படும் நிதிக்கட்டுப்பாடு, நிதிகளின் பொறுப்பு, வருமானங்கள் மற்றும் கொடுப்பனவுகள், வரவு செலவு மதிப்பீடு, வழங்கல், வேலைகளும், சேவைகளும் ஆகிய விடயங்களில் பரீட்சார்த்திக்குள்ள அறிவு மற்றும் புரிந்து கொள்ளுதல் என்பவற்றை உள்ளடக்கிய பகுதிக்கட்டமைப்பு முறையிலான 05 வினாக்களை கொண்டமைந்திருக்கும். (50 புள்ளிகள்)

(இ) பகுதி III - பொருட்களின் மீளாய்வும் களஞ்சியப்படுத்தலும் தொடர்பான அடிப்படை விடயங்கள் அடங்கிய பகுதிக் கட்டமைப்பு முறையிலான 03 வினாக்களை கொண்டமைந்திருக்கும் (25 புள்ளிகள்)

**குறிப்பு**.- கூட்டல் பயிற்சிகளுக்கு விடையளிக்கும்போது கணிப் பொறிகள் பயன்படுத்த அனுமதிக்கப்படமாட்டாது.

*பொதுவினாத்தாள்*.- ஏதேனும் ஒரு கூற்றினை அல்லது உரையாடலின் குறிப்பினை வாசித்து புரிந்து கொண்டு கடிதமொன்று மற்றும்/அல்லது அறிக்கையொன்று தயாரித்தல் அத்துடன் சமகால சமுதாயத்தின் நிகழ்வுகளைப் புரிந்து கொண்டு ஆராய்வதில் பரீட்சார்த்திக்குள்ள திறமையை மதிப்பிடல் இவ் வினாத்தாளில் எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும்.

பகுதி I - வழங்கப்பட்ட பந்தி ஒன்றில் அல்லது பிரச்சினை ஒன்றில் கேட்கப்படும் இரண்டு வினாக்களுக்கு (02) விடையளித்தல் வேண்டும் (45 புள்ளிகள்)

பகுதி II - பகுதிக்கட்டமைப்பு முறையிலான மூன்று (03) வினாக்கள் வழங்கப்படுவதுடன் அதில் இரண்டிற்கு விடையளித்தல் வேண்டும். (சிறு குறிப்பு எழுதும் வினா கட்டாயமாகும்)

| | |
|---|---|
| கட்டாய வினா (சிறு குறிப்பு) | - 30 புள்ளிகள் |
| ஏனைய வினாக்கள் | - 25 புள்ளிகள் |
| மொத்தம் | - 55 புள்ளிகள் |

**குறிப்பு**.- (i) பரீட்சார்த்தி தாம் சேவைக்கு சேர்ந்த மொழி மூலத்திலோ வேறு அரச கரும மொழியொன்றின் மூலமோ இவ்வினாத்தாள்களுக்கு விடையளிக்க வேண்டும்.

(ii) இப்பரீட்சையில் சித்தியடையும் பொருட்டு பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடத்திலும் ஆகக் குறைந்தது நூற்றுக்கு 33 சதவீத (33%) புள்ளிகளையும் மூன்று பாடங்களுக்கு உரிய மொத்தப் புள்ளிகளின் சராசரியில் நூற்றுக்கு 40 (40%) புள்ளிகளையும் ஒரே பரீட்சையில் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

6. பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பப்படுவதுடன் பரீட்சையில் சித்தியடைந்த பரீட்சார்த்திகளின் பெயர்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

7. விண்ணப்பப்படிவமானது இவ் அறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவ வடிவில் அமைதல் வேண்டும். பரீட்சார்த்திகள் அம்மாதிரி விண்ணபத்திற்கேற்ப தமது விண்ணப்பங்களை தயாரித்துக்கொள்ள வேண்டியதுடன் அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாக 2009, நவெம்பர் மாதம் 23 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சை திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். அவ்வாறு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கும் போது திருப்திகரமான சேவை தொடர்பான சான்றிதழ் அதற்குள் உள்ளடக்கப்படுதல் வேண்டும். சகல விண்ணப்பங்களும் எல்லா வகையிலும் சரியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதிலும் சேவைச் சான்றிதழ் தன்னால் கையொப்பமிடப்பட்டுள்ளது என்பதிலும் திணைக்களத் தலைவர் பொறுப்பாக இருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்புகின்ற

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித் திகதிக்கு பின்னராக கிடைக்கின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்.**– பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஓர் ஆவணத்தை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி ஒருவரின் பரீட்சார்த்த உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி இரத்துச் செய்யப்படலாம்.

9. **விண்ணப்பப்படிவங்கள்.**- விண்ணப்பப்படிவங்களை "ஏ4" அளவிலான ஒரு தாளில் தயாரித்துக்கொள்ள வேண்டியதுடன் இலக்கம் 1.0 தொடக்கம் 4.0 வரையுள்ள பந்திகள் முதலாம் பக்கத்திலும் ஏனையவை ஏனைய பக்கங்களிலும் அமைதல் வேண்டும் விண்ணபத்தை தட்டச்சின் மூலம் தயாரித்துக் கொள்ளலாம் எனினும் அதைப் பரீட்சார்த்தி சொந்தக் கையெழுத்தில் சரியாகவும் தெளிவாகவும் பூர்த்தி செய்ய வேண்டும்.

மாதிரி விண்ணப்பப் படிவத்தின் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்களம் அல்லது தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுவது இன்றியமையாததாகும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்புடையதாகாத மற்றும் முழுமைபெறாத தகவல்களைக் கொண்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் அறிவிப்பேது மின்றி நிராகரிக்கப்படும். மேலும் பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பப் படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கு ஏற்புடையதாகவுள்ளதா என்பதைப் பற்றி பரீட்சார்த்தியே பொறுப்புக் கூறுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.

முதல் தடவையாக இப்பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் எதுவித பரீட்சைக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. எனினும் அடுத்த தடவைகளின்போது அலுவலர்கள் ஒரே முறையில் முழுப்பரீட்சைக்குத் தோற்றுவதாயின் ரூபா 90 பெறுமதியான முத்திரைகளை விண்ணப்பத்தில் ஒட்டி தமது கையொப்பத்தையும் திகதியையும் இடுவதன் மூலம் அவற்றை உரியவாறு பெறுமதி நீக்கம் செய்ய வேண்டும். எக்காரணம் கொண்டும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது. இக் கட்டணத்தை வேறு ஏதும் பரீட்சைக்கு மாற்றவும் அனுமதி வழங்கப்படமாட்டாது.

விண்ணப்பங்கள் சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்குப் பரீட்சை ஆணையாளர் நாயகம் பரீட்சை நேரசூசி அட்டையின் ஒரு பிரதியுடன் பரீட்சை அனுமதி அட்டையை அனுப்புவார். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் அவர்களின் கையொப்பங்கள் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை பரீட்சை மேற்பார்வையாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய அனுமதி அட்டை இன்றி பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. விண்ணப்பதாரர்களிடம் அனுமதி அட்டை வழங்கியவுடன் அது தொடர்பாக குறிப்பிட்டு பத்திரிகை அறிவிப்பொன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் வெளியிடப்படும். அறிவிப்பு வெளியாகி 2/3 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காதுவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திடம் அறிவித்தல் வேண்டும். உங்கள் வசமுள்ள விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதி பதிவுசெய்யப்பட்ட பற்றுச்சீட்டு மற்றும் கொழும்புக்கு வெளிப் பிரதேசமாயின் பெக்ஸ் இலக்கம் என்பவற்றை குறிப்பிட்ட கோரிக்கை கடிதம் ஆகியவற்றை வைத்துக்கொண்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திடம் அறிவித்தல் மிகப் பயனுள்ளதாகும்.

10. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்ட அலுவலர்கள் பரீட்சைக்குத் தோற்றக்கூடியவாறு திணைக்களத் தலைவர்கள் கடமை விடுமுறை வழங்க வேண்டும். பிரயாண செலவுகள் வழங்கப்படமாட்டாது.

11. அரச கரும மொழிக்கொள்கையின் குறிக்கோள்களுக்காக சகல விண்ணப்பதாரர்களும் தமது விண்ணப்பங்களை அரச கரும மொழியில் தயாரிக்கப்பட வேண்டியதுடன் அவற்றினை அம் மொழியிலேயே பூரணப்படுத்தல் வேண்டும்.

12. இப்பரீட்சை அறிவித்தலுக்கு ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயம் தொடர்பான இறுதித் தீர்மானம் இணைந்த சேவைகளின் பணிப்பாளர் நாயகத்தைச் சார்ந்ததாக இருக்கும்.

பி. பீ. பீ. எஸ். அபேகுணரத்ன,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2009, ஒற்றோபர் மாதம் 07 ஆந் திகதி.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III ஐச் சேர்ந்த அலுவலர்களை வகுப்பு II இற்கு தரமுயர்த்தும் பரீட்சை - 2009**

Examination for Promotion of Officers in Class III of Public Management Assistants' Service into Class II of the Service – 2009

பரீட்சைக்குத் தோற்றும்
மொழி மூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது)

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| | |

வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 2.0 பிரகாரம் நீங்கள் பரீட்சைக்கு தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரமும் நகரத்தையும் இலக்கத் தையும் குறிப்பிடவும். இதைப் பின்ன ராக மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது)

1.0 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர், முதலெழுத்துக்கள் இறுதியில் :----.
(ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) உதா.: SUNIL, A.B.
1.2 முழுப்பெயர் (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) : -----.
1.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-----.

1.4 நீங்கள் அரசாங்க சேவையில் சேர்ந்த பின்னர் உங்களது பெயரையும் மாற்றியுள்ளீரா? அவ்வாறாயின் முன்னர் இருந்த பெயரைக் குறிப்பிடவும் :-----.

2.0 சேவை நிலையமும் முகவரியும் :-----.

2.1 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் : -----.
(ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்)

2.2 அலுவலகத்தின்/திணைக்களத்தின்/நிறுவனத்தின் பெயரும் முகவரியும் : -----.
(சிங்களத்தில்/தமிழில்)
(இம் முகவரிக்கு அனுமதி அட்டை அஞ்சலிடப்படும்)

3.0 3.1 பால் : (உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)
பெண் - 1
ஆண் - 0 ☐

3.2 பிறந்த திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

4.0 தேசிய அடையாள அட்டை இல.:

☐☐☐☐☐☐☐☐☐☐

5.0 தற்போது வகிக்கும் பதவி :-

5.1 பதவி :-----.

5.2 நியமனக் கடிதத்தின் இலக்கமும் திகதியும் :----.

5.3 அச்சேவையில் வகுப்பு III இன் அலுவலராக நியமனத்தை உறுதிப்படுத்திய திகதி :----.

6.0 6.1 நீங்கள் முதற் தடவையாக பரீட்சைக்குத் தோற்றுகின்றீர்களா? :----.

6.2 பரீட்சைக்கு முதற்தடவையாக தோற்றவில்லையெனில் ஒட்டப்பட்ட முத்திரைகளின் பெறுமதி :----.

6.3 முத்திரைக்கூடு

| |
|---|
| நீங்கள் பரீட்சைக்கு முதற் தடவையாக தோற்றவில்லையெனில் ரூபா 90 பெறுமதியான முத்திரைகளை இங்கு ஒட்டிவிடவும். |

7.0 பரீட்சார்த்தியின் கூற்று :-

I. மேற்படி என்னால் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் யாவும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் சரியானவை எனவும்,

II. அரச முகாமை உதவியாளர் சேவையின் அலுவலர் எனவும் ............ ஆந் திகதி எனது நியமனம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

III. 2009, நவெம்பர் மாதம் 23 ஆந் திகதியில் உடன் முன்னரான 04 வருட காலத்திற்குள் எல்லா வேதன ஏற்றங்களையும்/பெற்றுக்கொள்ள முடியுமான எல்லா சம்பள ஏற்றங்களையும் என்னால் உழைத்துப் பெறப்பட்டது எனவும்,

IV. இறுதியான சம்பள ஏற்றத் திகதியிலிருந்து தண்டனை அல்லது எச்சரிக்கைக்கு மேற்பட்ட பாரிய தண்டனை எதுக்கும் நான் ஆளாகவில்லை என்றும்,

V. நான் பரீட்சைக்கு முதன் முறையாக தோற்றுகிறேன் எனவும்/ பரீட்சைக் கட்டணத்திற்கான உரிய பெறுமதிகளுடன் கூடிய முத்திரைகளை இங்கு ஒட்டியுள்ளேன் எனவும் கௌரவத்துடன் உறுதிப் படுத்துகிறேன்.
இதில் ஏதேனும் தகவலொன்று பொய்யானதெனவோ அல்லது பிழையானதெனவோ அறியவருமிடத்து எனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் அறிவேன். இப்பரீட்சை யின் ஒழுங்கு விதிகளை கடைப்பிடிப்பதற்கு நான் இணங்குகின்றேன்.

மேற்படி விபரங்கள் சரியானவை எனவும், மேற் காட்டப்பட்டுள்ள மொழி மூலத்தில் பரீட்சைக்கு தோற்றுவதற்கு எனக்கு உரித்துகள் உள்ளதெனவும் வெளிப்படுத்துகின்றேன். இங்கு ஒட்டப்பட்டுள்ள ரூபா ......... முத்திரைகள் பயன்படுத்தப்படாத செல்லு படியானவைகள் எனவும் உறுதிப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங் களுக்கு நான் இணங்குகிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.
(கீழ் குறிப்பிடப்படும் குறிப்பை பார்க்கவும்)

திகதி :----.

**குறிப்பு**.- திணைக்களத் தலைவர் அல்லது அத்திணைக்களத் தலைவருக்கு பதிலாக கையொப்பமிடுவதற்கு அதிகாரம் பெற்ற அலுவலரொருவர் முன்னிலையில் பரீட்சார்த்தி கையொப்பமிடுதல் வேண்டும்.

**கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

திரு./திருமதி/செல்வி ................................ எனது அலுவலகத்தின் அலுவலர் எனவும், நான் தனிப்பட்ட முறையில் அவரை அறிவேன் எனவும் .......... ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்

பெயர் :----.
பதவிப்பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

(i) திரு./திருமதி/செல்வி ...................... 2009, நவெம்பர் மாதம் 23 ஆந் திகதியன்று அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III இல் நான்கு (04) வருட சேவையை பூர்த்தி செய்துள்ள அலுவலரெனவும் .......... ஆந் திகதிய இலங்கைச்

சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமையுள்ளவரெனவும்.

(ii) அவரின் பெயர் வழிக் கோப்பின் வகுப்பு III இன் நியமனக் கடிதத்தின் இலக்கம் ............ (நியமனக் கடிதத்தின் இலக்கம் எழுதவும்) எனவும்,

(iii) அவரின் இவ் விண்ணப்பப்படிவத்தில் 1.0 முதல் 7.0 வரையுள்ள பந்திகளில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் சரியானவையா என பரிசீலனை செய்யப்பட்டதெனவும், அவை சரியானவை எனவும்,

(iv) அவர் இப்பரீட்சைக்கு முதற் தடவையாக தோற்றுகின்றார் எனவும்/தொடர்புடைய பரீட்சைக்காக குறித்துரைக்கப்பட்ட முத்திரைகள் ஒட்டப்பட்டுள்ளன எனவும் உறுதிப் படுத்துகின்றேன்.

(தேவையற்றவையை கீறி விடவும்.)

-----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

10-791

---

## இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் முகாமைத்துவ உதவிச் சேவையின் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2009

1.0 இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் முகாமைத்துவ உதவிச் சேவையின் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை, இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளரால் கொழும்பில் 2009, திசெம்பர் மாதத்தில் நடாத்தப்படும்.

2.0 **பரீட்சை முறையும் பாடத்திட்டமும்**.- இந்த வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையானது கீழ் குறிப்பிடப்படும் பாடங்களை கொண்டதுடன் குறித்த 03 வினாப்பத்திரங்களைக் கொண்டதாகும். ஒரு வினாப்பத்திரத்திற்கான மொத்தப்புள்ளியானது 100 வீதமாகும் என்பதுடன் தேர்வடையும் பொருட்டு ஒவ்வொரு பாடத்திலும் 40% புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். சகல பாடங்களுக்கும் ஒர தடவையிலோ அல்லது பல தடவைகளிலோ உத்தியோகத்தர்களுக்கு அமருவதற்கு சந்தர்ப்பமுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. அலுவலக முறை | - | 1 மணித்தியாலம் |
| 2. நிதி நிர்வாக முறைபற்றிய அடிப்படை அறிவு | - | 1மணித்தியாலம் |
| 3. விடயத்துடன் இணைந்த அறிவு | - | 1 1/2 மணித்தியாலம் |

2.1 முதலாவது வினாப்பத்திரம் - பாட இலக்கம் 01 - அலுவலக முறை

அரசாங்க நிறுவனங்களிலும் அதிகார சபைகளிலும் பயன்படுத்தப்படுகின்ற அலுவலக முறை பற்றிய அடிப்படை அறிவு (அந்த அறிவினை பயன்படுத்தக்கூடிய ஆற்றல், பரிமாறிக்கொள்ளப்படுகின்ற அலுவலகக் கடிதங்களைப் பற்றிய விளக்கம், ஆவணங்களைப் பற்றிய கருத்துக்களையும் அவதானிப்புக்களையும் குறிப்பாக சுட்டிக்காட்டும் ஆற்றல்கள் ஆவண வரைவுகளை மேற்கொள்ளல், கடிதங்களைப் பராமரித்தல், அலுவலகத்தில் பொதுவான நடத்தைகள், மக்கள் தொடர்புகள் பற்றிய விளக்கங்கள்)

2.2 இரண்டாவது வினாப்பத்திரம் - பாட இலக்கம் 02 - நிதி நிர்வாக முறைபற்றிய அடிப்படை அறிவு

அரசாங்க நிறுவனங்களிலும் அதிகார சபைகளிலும் பயன்படுத்தப்படுகின்ற நிதிப்பிரமானம் பற்றிய அடிப்படை அறிவுச் செயற்பாடுகள், நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் புத்தக ஆவணப்பணிகள் பற்றிய விளக்கங்கள், (களஞ்சிய பொருட்கள் மற்றும் வளங்களைப் பெற்றுக் கொள்ளல், விநியோகமும், பயன்பாடும், சம்பள மற்றும் கொடுப்பனவுகளைச் செலுத்துதல், காசு பொறுப்பேற்றலும் கணக்கிடுவதும்.)

2.3 மூன்றாவது வினாப்பத்திரம் - பாட இலக்கம் 03 - பாடத்துடன் இணைந்த அறிவு

அதிகார சபையின் அலுவலக பிரிவுகளின் மேற் கொள்ளப்படுகின்ற கடமைகளும் களத்துறை கடமைகள் பற்றிய விளக்கம் பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்ற சேவைகள், சமுர்த்தி உதவித் திட்டம், சமூக அபிவிருத்தி வேலைகள், சமுர்த்தி சேமிப்புகளும் கடனும், பயனாளிச் சங்கங்களும், மக்கள் அமைப்புக்கள் பற்றிய அறிவும், சமுர்த்தி இயக்கத்தின் நோக்கமும் எதிர்ப்பார்ப்பும்.

3. இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மாத்திரம் நடைபெறும். இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மாதிரி விண்ணப்பப் படிவமொன்று இந்த அறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இந்த மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பப்படிவங்களை தயாரித்துக் கொள்ளல் வேண்டும். A4 அளவிலான தாளின் இருபக்கங்களில் விண்ணப்பப்படிவங்கள் தயாரிக்கப்படவேண்டும். விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே விண்ணப்பப்படிவங்கள் பூரணப்படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பிக்கும் மொழியினை பின்னர் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது. விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு இலக்கம் 1.0 தொடக்கம் 6.0 வரை முதலாம் பக்கத்திலும் எஞ்சியவை இரண்டாம் பக்கத்திலும் அமையும் விதத்தில் தயாரிக்கப்படல் வேண்டும் என்பதுடன் அதற்குரிய தகவல்களை தங்களது கையெழுத்தினாலேயே தெளிவாக பூரணப்படுத்துதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு ஏற்ற விதத்தில் அமையாத விண்ணப்பப்படிவங்களும் பூரணமில்லாத விதத்தில் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்களும் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். அவ் விண்ணப்பப்படிவத்தின் போட்டோ பிரதியொன்றினை தங்களிடம் வைத்துக்கொள்வது பயனுள்ளதாக அமையும்.

4. விண்ணப்பப்படிவங்களை தங்களது பிரிவுத் தலைவரின் ஊடாக (மாவட்ட செயலாளர்/ பிரதேச செயலாளர் பிரிவுகளில் இணைக்கப்பட்டிருப்பின் அதனை மாவட்டச்செயலாளர்/மாவட்ட சமுர்த்திப்பணிப்பாளர்/பிரதேச செயலாளர்கள்/பிரதி சமுர்த்தி பணிப்பாளர்கள் ஊடாக) 2009.11.23 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பணிப்பாளர் நாயகம், இலங்கை சமுர்த்தி அதிகாரசபை, 4வது மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை" என்ற முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தினை அனுப்பும் கடிதஉறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிரா கரிக்கப்படும்.

5. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப் பட்டவுடனேயே அது தொடர்பில் பத்திரிகை அறிவித்தல் ஒன்று வெளியிடப்படும். அறிவித்தல் வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் கழிந்ததன் பின்னர் அனுமதி அட்டை கிடைக்காவிடின், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதுபற்றி இலங்கை சமுர்த்தி அதிகாரசபைக்கு அறிவித்தல் வேண்டும். தங்களிடம் வைத்துக்கொண்டுள்ள விண்ணப்பப்படிவத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியினையும், பதிவு செய்த பற்றுச்சீட்டினையும் கொழும்புக்கு தூரமான பிரதேசம் ஒன்றாயின் அனுமதிப்பத்திரத்தினை அனுப்பும் பொருட்டு தொலைநகல் இலக்கம் ஒன்றினையும் குறிப்பிட்டு உங்களது கோரிக்கைக் கடிதத்தினையும் இணைத்து வைத்து இலங்கை சமுர்த்தி அதிகார சபைக்கு அறிவிப்பது மிகப்பயனுள்ளதாகும்.

6. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் சகல பாடங்களுக்கும் மண்டப அதிபதி திருப்திப்படக்கூடிய வகையில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(I) ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(II) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (பாஸ்போட் அனுமதிப் பத்திரம்).

7. இப்பரீட்சை நடாத்துவது சம்பந்தமாக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளரால் விடுவிக்கப்படும் சட்ட விதிகளுக்கு பரீட்சார்த்திகள் உட்படுவர். அந்த சட்ட விதிகள் மீறப்பட்டால் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளரால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் உள்ளாக வேண்டி வரும். விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவது அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகுதிகளை கொண்டுள்ளதற்கு அங்கீகாரமாக கருதலாகாது.

8. இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பித்துள்ள சகலருக்கும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளரால் அனுமதிப்பத்திரம் அனுப்பப்படும் என்பதுடன் அவர்களுக்குத் தங்களது அலுவலகத் தலைவரினால் உத்தியோக விடுமுறை வழங்கப்படல் வேண்டும். பரீட்சை நடைபெறும் தினத்தன்று தனது கையொப்பத்தினை உறுதிப்படுத்திக் கொண்ட அனுமதிப் பத்திரத்தினை மண்டப அதிபதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

9. இந்த விதிமுறைகளுக்கு உட்படாத ஏதேனும் விடய மொன்றிருப்பின், இலங்கை சமுர்த்தி அதிகாரசபை பணிப்பாளர் சபையின் விருப்பத்தின் பிரகாரம் அது தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ஆர். பீ. பி. திலகசிரி,
பணிப்பாளர் நாயகம்.

இலங்கை சமுர்த்தி அதிகாரசபை,
4 ஆம் மாடி, "செத்சிரிபாய",
பத்தரமுல்லை.

[ ]
சுட்டெண்

**இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் முகாமைத்துவ உதவிச் சேவையின் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2009**

[ ]
(அலுவலக உபயோகத்துக்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :- [ ]

சிங்களம் - 2, தமிழ் - 3 (உரிய கூட்டினுள் எழுதவும்)

1. பெயர் :-
   1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
   (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)
   உதா.: SILVA, A. B.
   1.2 முதலெழுத்துக்களை குறிக்கும் பெயர் :-----.
   (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)
   1.3 முழுப் பெயர் :-----.
   (சிங்களத்தில்/தமிழில்)

2. அனுமதிப்பத்திரம் அனுப்பப்படவேண்டிய முகவரி :-----.
   (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)
   2.1 அலுவலக முகவரி :-----.
   (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்)
   2.2 நிரந்தர முகவரி :-----.
   (சிங்களத்தில்/தமிழில்)

3. பெண்/ஆண் :

பெண் - 1

ஆண் - 0 [ ]

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

4. விவாகமானவரா/விவாகமாகாதவரா? :-

விவாகமாகாதவர் - 1

விவாகமானவர் - 2 [ ]

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

6. பிறந்த திகதி :

ஆண்டு: [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]

6. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

[ | | | | | | | | | | ]

7. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தினத்தன்று வயது:

வருடங்கள் : [ | ] மாதங்கள் : [ | ] நாட்கள் : [ | ]

*8. தற்போது வகிக்கும் பதவியும் தரமும் :-----.*

*மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் உண்மையானவை எனவும் விண்ணப்பித்துள்ள மொழியில் பரீட்சைக்குத் தோற்ற உரிமையுள்ளது எனவும் கூறிக்கொள்கின்றேன். மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளரால் பிறப்பிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு இசைவதாகவும் அறிவித்துக்கொள்கின்றேன்.*

-----,
(விண்ணப்பதாரியின் கையொப்பம்)

*திகதி :-----.*

பணிப்பாளர் நாயகம்,

*சமர்ப்பிக்கின்றேன்.*

*மேலுள்ள விபரங்களைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிக்கு இப்பரீட்சையில் பரீட்சார்த்தியாகுவதற்குத் தகுதியுள்ளது எனவும் அவரால் குறிப்பிடப்பட்டுள்ள மொழியில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவர் தகுதியுள்ளவர் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.*

-----,
*பிரிவு/மாவட்டத் தலைவரின் கையொப்பம்.*
*பதவிப் பெயரும் உத்தியோக முத்திரையும்.*

*திகதி :-----.*

*10-880/1*

---

## இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் முகாமையாளர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2009

*1.0 இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் சமுர்த்தி முகாமையாளர்களுக்கான I வது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை, இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளரால் 2010, சனவரி மாதத்தில் கொழும்பில் நடாத்தப்படும்.*

*2.0* ***பரீட்சை முறையும் பாடத்திட்டமும்.***- *இந்த வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையானது கீழ் குறிப்பிடப்படும் பாடங்கள் உள்ளடங்கிய வினாப்பத்திரங்களை கொண்டதாகும். ஒரு வினாப்பத்திரத்திற்கு 3 மணித்தியாலங்கள் வீதம் வழங்கப்படும். ஒரு வினாப்பத்திரத்திற்கு 100 புள்ளிகள் வீதம் வழங்கப்படும் என்பதுடன் தேர்வடையும் பொருட்டு தேவைப்படும் ஆகக்குறைந்த புள்ளிகள் 40 ஆகும். சகல பாடங்களுக்கும் ஒரே தவணையிலோ அல்லது பல தவணைகளிலோ அமரும் பொருட்டு உத்தியோகத்தர்களுக்கு அனுமதியுண்டு.*

*2.1* ***முதலாவது வினாப்பத்திரம்*** *- பாட இலக்கம் 1 - பொருளாதார அபிவிருத்தி, வணிக மற்றும் வங்கி நடவடிக்கைகள் :*

(i) *பொருளாதார அபிவிருத்தி*
(ii) *வணிக மற்றும் வங்கி நடவடிக்கைகள்*

*2.2* ***இரண்டாவது வினாப்பத்திரம்*** *- பாட இலக்கம் 2 - தாபனக் கோவைகள், நிதிப்பிரமாணம் மற்றும் அலுவலக முறைமை :*

(i) *அலுவலக முறைமை :*
*(அலுவலக முறையின் முக்கியத்துவம், கோட்பாடுகள் கிடைக்கின்ற கடிதங்கள் மற்றும் வெளியே அனுப்பப்படும் கடிதங்கள் தொடர்பில் செயற்படுதல், ஆவணங்களில் பதிவுகளை மேற்கொள்ளுதல், பொது மக்களுடன் செயற்படுவது தொடர்பான விளக்கங்கள்)*

(ii) *தாபன விதிக்கோவை* - (I, II,, III, IV, VII, XII, XIV, XV, XXV *(அத்தியாயங்கள்)* )
*நிதிப்பிரமாணங்கள்* - (I, II, III, XIII *(அத்தியாயங்கள்)*)

*3. இப்பரீட்சையானது சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் மாத்திரம் நடைபெறும். இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மாதிரி விண்ணப்பப் படிவமொன்று இந்த அறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இந்த மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பப்படிவங்களை தயாரித்துக் கொள்ளல் வேண்டும். A4 அளவிலான தாளின் இருபக்கங்களில் விண்ணப்பப்படிவங்கள் தயாரிக்கப்படவேண்டும். விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே விண்ணப்பப்படிவங்கள் பூரணப்படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பிக்கும் மொழியினை பின்னர் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது. விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு இலக்கம் 1.0 தொடக்கம் 6.0 வரை முதலாம் பக்கத்திலும் எஞ்சியவை இரண்டாம் பக்கத்திலும் அமையும் விதத்தில் தயாரிக்கப்படல் வேண்டும் என்பதுடன் அதற்குரிய தகவல்களை தங்களது கையெழுத்தினாலேயே தெளிவாக பூரணப்படுத்துதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு ஏற்ற விதத்தில் அமையாத விண்ணப்பப்படிவங்களும் பூரணமில்லாத விதத்தில் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்களும் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். அவ் விண்ணப்பப் படிவத்தின் போட்டோ பிரதியொன்றினை தங்களிடம் வைத்துக் கொள்வது பயனுள்ளதாக அமையும்.*

*4. விண்ணப்பப்படிவங்களை தங்களது பிரிவுத் தலைவரின் ஊடாக (மாவட்டச் செயலாளர்/ பிரதேச செயலாளர்) பிரிவுகளில் இணைக்கப்பட்டிருப்பின் அதனை (மாவட்ட செயலாளர்/மாவட்ட சமுர்த்திப்பணிப்பாளர்/பிரதேச செயலாளர்கள்/பிரதி சமுர்த்தி பணிப்பாளர்கள் ஊடாக) 2009.11.23 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் ''பணிப்பாளர் நாயகம், இலங்கை சமுர்த்தி அதிகாரசபை, 4வது மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை'' என்ற முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தினை அனுப்பும் கடிதஉறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

*5. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டவுடனேயே அது தொடர்பில் பத்திரிகை அறிவித்தல் ஒன்று வெளியிடப்படும். அறிவித்தல் வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் கழிந்ததன் பின்னர் அனுமதிப்பத்திரம் கிடைக்காவிடின், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதுபற்றி இலங்கை சமுர்த்தி அதிகாரசபைக்கு அறிவித்தல் வேண்டும். தங்களிடம் வைத்துக்கொண்டுள்ள விண்ணப்பப்படிவத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியினையும், பதிவு செய்த பற்றுச்சீட்டினையும் கொழும்புக்கு தூரமான பிரதேசம் ஒன்றாயின் அனுமதிப்பத்திரத்தினை அனுப்பும் பொருட்டு தொலைநகல் இலக்கம் ஒன்றினையும் குறிப்பிட்டு உங்களது கோரிக்கைக் கடிதத்தினையும் இணைத்து வைத்து இலங்கை சமுர்த்தி அதிகார சபைக்கு அறிவிப்பது மிகப்பயனுள்ளதாகும்.*

*6. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் சகல பாடங்களுக்கும் மண்டப அதிபதி திருப்திப்படக்கூடிய வகையில் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-*

(I) *ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;*

(II) *செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (பாஸ்போட் அனுமதிப் பத்திரம்).*

7. இப்பரீட்சை நடாத்துவது சம்பந்தமாக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளரால் விடுவிக்கப்படும் சட்ட விதிகளுக்கு பரீட்சார்த்திகள் உட்படுவர். அந்த சட்ட விதிகள் மீறப்பட்டால் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளரால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவன்/அவள் உள்ளாக வேண்டி வரும். விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவது அவன்/அவள் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகுதிகளை கொண்டுள்ளதற்கு அங்கீகாரமாக கருதலாகாது.

8. இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணபித்துள்ள சகலருக்கும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளரால் அனுமதிப்பத்திரம் அனுப்பப்படும் என்பதுடன் அவர்களுக்குத் தங்களது அலுவலகத் தலைவரினால் உத்தியோக விடுமுறை வழங்கப்படல் வேண்டும். பரீட்சை நடைபெறும் தினத்தன்று தனது கையொப்பத்தினை உறுதிப்படுத்திக் கொண்ட அனுமதிப் பத்திரத்தினை மண்டப அதிபதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

9. இந்த விதிமுறைகளுக்கு உட்படாத ஏதேனும் விடய மொன்றிருப்பின், இலங்கை சமுர்த்தி அதிகாரசபை பணிப்பாளர் சபையின் விருப்பத்தின் பிரகாரம் அது தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ஆர். பீ. பி. திலகசிரி,
பணிப்பாளர் நாயகம்.

இலங்கை சமுர்த்தி அதிகாரசபை,
4 ஆம் மாடி, செத்சிரிபாய,
பத்தரமுல்லை.

**இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் சமுர்த்தி முகாமையாளர்களுக்கான I வது வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2009**

(அலுவலக உபயோகத்துக்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :-

சிங்களம் - 2, தமிழ் - 3 (உரிய கூட்டினுள் எழுதவும்)

1. பெயர் :-
   - 1.1 முதலெழுத்துக்கள் இறுதியாக வரும் விதத்தில் முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
     (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)
     உதா.: SILVA, A. B.
   - 1.2 முழுப்பெயர் :-----.
     (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)
   - 1.3 முழுப் பெயர் :-----.
     (சிங்களத்தில்/தமிழில்)
2. நிரந்தர முகவரி :-----.
   (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)
   - 2.1 நிரந்தர முகவரி :-----.
     (சிங்களத்தில்/தமிழில்)
   - 2.2 அலுவலக முகவரி :-----.
     (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்)
3. பெண்/ஆண் :
   பெண் - 1
   ஆண் - 0
   (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)
4. விவாகமானவரா/விவாகமாகாதவரா :-
   விவாகமாகாதவர் - 1
   விவாகமானவர் - 2
   (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)
5. தேசிய அடையாள அட்டை இலக்கம் :
6. பிறந்த திகதி :
   வருடம் : மாதம் : திகதி :
7. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தினத்தன்று வயது:
   வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :
8. பதவியும் தரமும் :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் உண்மையானவை எனவும் விண்ணப்பித்துள்ள மொழியில் பரீட்சைக்குத் தோற்ற உரிமையுள்ளது எனவும் கூறிக்கொள்கின்றேன். மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பிறப்பிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு இசைவதாகவும் அறிவித்துக்கொள்கின்றேன்.

-----,
(விண்ணப்பதாரியின் பெயர்)

திகதி :-----.

பரீட்சை ஆணையாளர் நாயகம்,

சமர்ப்பிக்கின்றேன்.

மேலுள்ள விபரங்களைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிக்கு இப்பரீட் சையில் பரீட்சார்த்தியாகுவதற்குத் தகுதியுள்ளது எனவும் அவரால் குறிப்பிடப்பட்டுள்ள மொழியில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவர் தகுதியுள்ளவர் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
பிரிவு/மாவட்டத் தலைவரின் கையொப்பம்.
பதவிப் பெயரும் உத்தியோக முத்திரையும்.

திகதி :-----.

10-880/2

## இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் கணக்காய்வு சேவையின் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2009

1.0 இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் கணக்காய்வு உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை, இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளரால் கொழும்பில் 2009, திசெம்பர் மாதத்தில் நடாத்தப்படும்.

2.0 **பரீட்சை முறையும் பாடத்திட்டமும்.**- இந்த வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையானது கீழ் குறிப்பிடப்படும் பாடங்களை கொண்டதுடன் குறித்த இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டதாகும். ஒரு வினாப்பத்திரத்திற்கான மொத்தப்புள்ளிகள் 100 வீதமாகும் என்பதுடன் தேர்வடையும் பொருட்டு ஒவ்வொரு பாடத்திலும் 40% புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

| | |
|---|---|
| (1) அலுவலக நிர்வாகமும் ஆளணி நிர்வாக முறைமையும் | - 1 1/2 மணித்தியாலம் |
| (2) நிதி நிர்வாக முறைமை | - 1 1/2 மணித்தியாலம் |

2.1 முதலாவது வினாப்பத்திரம் - பாட இலக்கம் 01 - அலுவலக நிர்வாகமும் ஆளணி நிர்வாக முறைமையும். அரசாங்கப் பிரிவின் நிறுவனங்களிலும் அதிகார சபையிலும் பயன்படுத்தப்படுகின்ற அலுவலக முறை பற்றிய அடிப்படை அறிவும் அந்த அறிவினைப் பயன்படுத்தும் ஆற்றலும் பரிமாற்றிக் கொள்கின்ற கடிதங்கள், ஆவணங்கள் பற்றிய கருத்துக்களும் பிரேரணைகளும் அவதானிப்புக்களை குறிப்பாகச் சுட்டிக் காட்டும் ஆற்றல்கள், ஆவணங்களை வரவு செய்தல், அலுவலகத்தில் பொதுவான நடத்தைகள், பணியாளர்களை ஆட்சேர்த்துக்கொள்ளும் கொள்கைகளும் முறைகளும், வரவு மற்றும் அரச ஊழியர்களின் நடத்தைகள், விடுமுறை மற்றும் நன்மைகள்.

2.2 இரண்டாவது வினாப்பத்திரம் - பாட இலக்கம் 02 - நிதி நிர்வாக முறைமை

அதிகார சபையில் பயன்படுத்தப்படுகின்ற அடிப்படை கணக்கீட்டுச் செயற்பாடுகள், பணக் கொடுக்கல் வாங்கல்கள் புத்தகங்கள் ஆவணங்கள் பற்றிய விளக்கமும் அறிவும், களஞ்சிய பொருட்கள், மற்றும் வழங்கல்களைப் பெற்றுக் கொள்ளல், விநியோகம் மற்றும் பயன்பாடும் பற்றிய அறிவு, வங்கிக் கணக்குகள், முற்பணங்களும் கடன் முறைகளும்.

3. இப்பரீட்சையானது சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் மாத்திரம் நடைபெறும். இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மாதிரி விண்ணப்பப்படிவமொன்று இந்த அறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப் பட்டுள்ளது. இந்த மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பப்படிவங்களை தயாரித்துக் கொள்ளல் வேண்டும். A4 அளவிலான தாள்களில் இருபக்கங்களிலும் மட்டுமே விண்ணப்பப்படிவங்கள் தயாரிக்கப்படவேண்டும். விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்றும் மொழியிலேயே விண்ணப்பப்படிவங்கள் பூரணப்படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பிக்கும் மொழியினை பின்னர் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது. விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு இலக்கம் 1.0 தொடக்கம் 6.0 வரை முதலாம் பக்கத்திலும் எஞ்சியவை இரண்டாம் பக்கத்திலும் அமையும் விதத்தில் தயாரிக்கப்படல் வேண்டும் என்பதுடன் அதற்குரிய தகவல்களை தங்களது கையெழுத்தினாலேயே தெளிவாக பூரணப்படுத்துதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு ஏற்ற விதத்தில் அமையாத விண்ணப்பப்படிவங்களும் பூரணமில்லாத விதத்தில் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்களும் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். அவ் விண்ணப்பப் படிவத்தின் போட்டோ பிரதியொன்றினை தங்களிடம் வைத்துக் கொள்வது பயனுள்ளதாக அமையும்.

4. விண்ணப்பப்படிவங்களை தங்களது பிரிவுத் தலைவரின் ஊடாக (மாவட்ட செயலாளர்/பிரதேச செயலாளர் பிரிவுகளில் இணைக்கப் பட்டிருப்பின் அதனை மாவட்டச்செயலாளர்/மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர்/பிரதேச செயலாளர்கள்/பிரதி சமுர்த்தி பணிப்பாளர்கள் ஊடாக) 2009.11.23 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் "பணிப்பாளர் நாயகம், இலங்கை சமுர்த்தி அதிகாரசபை, 4வது மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை" என்ற முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தினை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

5. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை வழங்கப்பட்ட வுடனேயே அது தொடர்பில் பத்திரிகை அறிவித்தல் ஒன்று வெளியிடப்படும். அறிவித்தல் வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் கழிந்ததன் பின்னர் அனுமதி அட்டை கிடைக்காவிடின், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதுபற்றி இலங்கை சமுர்த்தி அதிகாரசபைக்கு அறிவித்தல் வேண்டும். தங்களிடம் வைத்துக்கொண்டுள்ள விண்ணப்பப்படிவத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியினையும், பதிவு செய்த பற்றுச்சீட்டினையும் கொழும்புக்கு தூரமான பிரதேசம் ஒன்றாயின் அனுமதிப்பத்திரத்தினை அனுப்பும் பொருட்டு தொலைநகல் இலக்கம் ஒன்றினையும் குறிப்பிட்டு உங்களது கோரிக்கைக் கடிதத்தினையும் இணைத்து வைத்து இலங்கை சமுர்த்தி அதிகாரசபைக்கு அறிவிப்பது மிகப்பயனுள்ளதாகும்.

6. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் சகல பாடங்களுக்கும் மண்டப அதிபதி திருப்திப்படக்கூடிய வகையில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(I) ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(II) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (பாஸ்போட் அனுமதிப் பத்திரம்).

7. இப்பரீட்சை நடாத்துவது சம்பந்தமாக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளரால் விடுக்கப்படும் சட்ட விதிகளுக்கு பரீட்சார்த்திகள் உட்படுவர். அந்த சட்ட விதிகள் மீறப்பட்டால் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளரால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவன்/அவள் உள்ளாக வேண்டி வரும். விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவது அவன்/அவள் பரீட்சைக்கு தோற்றுவதற்கான தகுதிகளை கொணடுள்ளதற்கு அங்கீகாரமாக கருதலாகாது.

8. இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விண்ணப்பித்துள்ள சகலருக்கும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளரால் அனுமதிப்பத்திரம் அனுப்பப்படும் என்பதுடன் அவர்களுக்குத் தங்களது அலுவலகத் தலைவரினால் உத்தியோக விடுமுறை வழங்கப்படல் வேண்டும். பரீட்சை நடைபெறும் தினத்தன்று தனதுகையொப்பத்தினை உறுதிப்படுத்திக் கொண்ட அனுமதிப் பத்திரத்தினை மண்டப அதிபதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

9. இந்த விதிமுறைகளுக்கு உட்படாத ஏதேனும் விடய மொன்றிருப்பின், இலங்கை சமுர்த்தி அதிகாரசபை பணிப்பாளர் சபையின் விருப்பத்தின் பிரகாரம் அது தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ஆர். பீ. பி. திலகசிரி,
பணிப்பாளர் நாயகம்.

இலங்கை சமுர்த்தி அதிகாரசபை,
4 ஆம் மாடி, செத்சிரிபாய,
பத்தரமுல்லை,
அலுவலக நிர்வாகமும் ஆளணி நிர்வாக முறைமையும்.

சுட்டெண்

**இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் கணக்காய்வுச் சேவையின் உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சை - 2009**

(அலுவலக உபயோகத்துக்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :-

சிங்களம் - 2, தமிழ் - 3 (உரிய கூட்டினுள் எழுதவும்)

1. பெயர் :-
   - 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
     (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)
     உதா.: SILVA, A. B.
   - 1.2 முதலெழுத்துக்களை குறிக்கும் பெயர் :-----.
     (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)
   - 1.3 முழுப் பெயர் :-----.
     (சிங்களத்தில்/தமிழில்)

2. அனுமதிப் பத்திரம் அனுப்பப்படவேண்டிய முகவரி :-----.
   (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)
   - 2.1 அலுவலக முகவரி :-----.
     (ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்)
   - 2.2 நிரந்தர முகவரி :-----.
     (சிங்களத்தில்/தமிழில்)

3. பெண்/ஆண் :

   பெண் - 1

   ஆண் - 0

   (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

4. விவாகமானவரா/விவாகமாகாதவரா :-

   விவாகமாகாதவர் - 1

   விவாகமானவர் - 2

   (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

5. பிறந்த திகதி :

   ஆண்டு: மாதம் : திகதி :

6. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

7. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தினத்தன்று வயது:

   வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

8. தற்போது வகிக்கும் பதவியும் தரமும் :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் உண்மையானவை எனவும் விண்ணப்பித்துள்ள மொழியில் பரீட்சைக்குத் தோற்ற உரிமையுள்ளது எனவும் கூறிக்கொள்கின்றேன். மேலும் பரீட்சை நடாத்துவது தொடர்பில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் பணிப்பாளரால் பிறப்பிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு இசைவதாகவும் அறிவித்துக்கொள்கின்றேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி :-----.

பணிப்பாளர் நாயகம்,

சமர்ப்பிக்கின்றேன்.

மேலுள்ள விபரங்களைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிக்கு இப்பரீட்சையில் பரீட்சார்த்தியாகுவதற்குத் தகுதியுள்ளது எனவும் அவரால் குறிப்பிடப்பட்டுள்ள மொழியில் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவர் தகுதியுள்ளவர் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
பிரிவு/மாவட்டத் தலைவரின் கையொப்பம்.
பதவிப் பெயரும் உத்தியோக முத்திரையும்.

திகதி :-----.

10-880/3